**STARTING TIME 12.46. P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 22/2025**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff solemnly affirmed by Tmt. S. Vennila, Sheristadar of this court, on 30.07.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : சுலோச்சனா Husband's Name : பிச்சாண்டி

Address : எண்.114, குளத்து மேட்டுத்தெரு, R. குன்னத்தூர் கிராமம், போளூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்.

Age : 58

**1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது அப்பாவிற்கு சொந்தமான சொத்தில் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். எனது உடன் பிறந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர் என்றால், என்னையும் சேர்த்து 5 பேர் ஆவார்கள். தாவா சொத்தை கிரையம் பெற்ற போது எனது தகப்பனார் என்ன வேலை செய்து வந்தார் என்றால், ரயில்வேயில் வேலை செய்து வந்தார்.

2. 1–ம் பிரதிவாதி சம்பாதித்து வந்த பணத்தை கொண்டு மாத சீட்டி கட்டி வந்து, அந்த பணத்தை எனது தகப்பனாரிடம் கொடுத்து அவர் பெயரில் தாவா சொத்துக்களை கிரையம் பெறப்பட்டது என்றால், சரியல்ல. 2–ம் பிரதிவாதி தான் செலவு செய்து என்னுடைய திருமணத்தை செய்து வைத்தார் என்றால், சரியல்ல,

எனது சொந்த அத்தைமகனாக எனது கணவருக்கு அவர்கள் செலவிலேயே எளிமையாக எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள்.

3. பிரதிவாதிகள் தாவா சொத்தை பாகம் பிரித்துக் கொள்வதாக என்னிடம் சொன்னார்களா என்றால், இல்லை. தாவா சொத்தை பாகம் பிரித்தபோது அதில் எனது அக்கா சாட்சி கையெழுத்து செய்த விவரம் தெரியுமா என்றால், தெரியாது. தாவா சொத்துக்களில் 1-ம் பிரதிவாதி எனக்கு பாகம் கொடுப்பதாக சொன்னாரா இல்லையா என்றால், சட்டப் பணிகள் குழுவில் மனு கொடுத்த அங்கு விசாரணை நடந்த போது தான் பாகம் கொடுக்க ஒப்புக் கொண்டார்.

4. எனது தாயார் எப்போது காலமானார் என்றால், 2015-ம் ஆண்டு காலமானார். எங்கள் ஊரை சேர்ந்த ராமன் மகன் முருகன் என்பவரை தெரியுமா என்றால், தெரியும். மேற்படி முருகன் எனது அம்மாவிடம் பணம் கடனாக வாங்கி சென்ற விவரம் தெரியுமா என்றால், தெரியாது. 1-ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை பாகம் கொடுக்க சம்மதம் தெரிவித்தும் தேவையில்லாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. சில நபர்களின் துண்டுதலின் பேரில் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME: 12.59. P.M.**

Special Subordinate Judge

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.07.30 18:08:05 +0530